322 திருமதி அமிலா விஜேவிக்கிரம, 110, மாளுருவில வீதி, கோணவெல, களனி;
323 மந்திரினி மெண்டிஸ், 24, வெதபொன் வீதி, நுவரெலியா.
324 நாமலி பட்டுவந்துடாவ, 17/3. வீரமன் வீதி, பாணந்துறை.
325 அஞ்சளா அழகக்கோன், 12/54, அக்குரஸ்ஸ வீதி, மாத்தறை.
326 எம்... மொகமட், 115, மனிங் பிளேஸ், கொழும்பு 6.
327 ருத்திராணி கருணாரத்ன, செவ்வந்தி தெனகம, விதாரன்தெனிய தங்காலை.

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டு

இளாலி மீனவர்சங்கத் தக்கு ரூபா நாலாயிரம் நன்கொடையாக வழங் கப்பட்டதற்கு இளி தொச்சி அரசாங்க அதி பர் திரு. கே. தேவ சிகாமணிக்கும் பிரதி உதவி அராங்க அதிபர் திரு. எஸ். கந்தசாமிக் கும் கடற்றொழிற் சங்கம் பாராட்டுத் தெரி வித்துள்ளது. (இ)

## போதைவஸ்து விற்பனை: 10 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜன. 02

யாழ். நகரில் போதை வஸ்துப் பாவனையிலும் விற்பனையிலும் ஈடுபட்டு வந்த பத்துப்பேர் கைது செய்யப்பட்டுள்ள தாக ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினர் தெரிவித்தனர்.

இவர்கள் கைதானதைத் தொடர்ந்து போதைவஸ்து விற்பனையின் சூத்திரதாரியான பெண் ஒருவர் தலைமறைவாகி விட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.


# T. V. ரவல்ஸ் & ரூரிஸ்ட்

## பெருமையுடன் வழங்கும் உடனடி வேலைவாய்ப்புக்கள்

### ★ சவூதி அரேபியா

கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் தற்சமயம் எம்மிடமுண்டு

| | | VACANCY | SALARY SR | SR |
|---|---|---|---|---|
| (1) | A/C Foreman | 1 | 750 + 150 | FA |
| (2) | Foreman | 1 | 750 + 150 | FA |
| (3) | Hull Fereman | 1 | 750 + 150 | FA |
| (4) | Syncro Lift Supervisor | 1 | 750 + 150 | FA |
| (5) | Electrician | 1 | 750 + 150 | FA |
| (6) | Machinest | 1 | 650 + 150 | FA |
| (7) | Plumber | 1 | 650 + 150 | FA |
| (8) | Crane / Eqmpt Operators | 2 | 750 + 150 | FA |
| (9) | Divers (சுழியோடிகள்) | 3 | 750 + 150 | FA |
| (10) | Store Keepers | 3 | 650 + 150 | FA |
| (11) | Clerks | 3 | 650 + 150 | FA |
| (12) | Diesel Mechanics | 3 | 650 + 150 | FA |
| (13) | Cooks | 2 | 650 + 150 | FA |

21yrs — 48 yrs

(14) றெஸ்ரோறன்ற் கீப்பர்ஸ் (Restaurant Keepers) 50 Vacancy Salary 350 SR

**With Food allowance paid**

**Age Limits:- 25 — 40 years**

WITHIN THREE WEEKS FLIGHT WILL BE ARRANGED.

**(Open Visa)**

முக்கிய குறிப்பு:-

1 — 13 வரையிலான வேலைகட்கு நேர்முகப் பரீட்சை கொழும்பில் 10 - 1 - 89, 11, 12, 13, 14-1-89 வரை நடைபெறும் எனவே கடவுச் சீட்டு, மூன்று கடவுச் சீட்டு அளவிலான போட்டோக்கள், அனுபவச்சான்றிதழ்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

## ★ குவைற் நாட்டில் ★
## வேலை வாய்ப்பு

**✶ Kuwait**

300 Cleaners 35 K. D

(ஆண்கள் மட்டும்) No Food

வயதெல்லை: — 18—48 வரை

05 - 02 - 1989 இல்தான் பிரயாணம் செல்லலாம்.

**✶ பெய்ரூட் - லெபனான்**

உடனடி வேலைவாய்ப்பு

100 தொழிலாளர்கள் 100 U.S.D

இருவாரத்தினுள் பயணம் செய்யலாம்.

**★ சவூதி அரேபியா**

உடனடி வேலைவாய்ப்பு

300 கிளீனர்ஸ் 400 SR.

(ஆண்கள் மட்டும்)

| | |
|---|---|
| 60 கனரகச் சாரதிகள் | 600 SR. |
| 04 பேர் தச்சுத் தொழிலாளர்கள் | 650 SR. |
| 04 பேர் மேசன் தொழிலாளர்கள் | 650 SR. |
| 02 பேர் ஏயர் கொண்டிசன் மெக்கானிக் | 700 SR |

வயதெல்லை: 21—48 வரை

**✶ Canada (கனடா)**

கனடா செல்வதற்கு விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**★ தாய்வான்**

தாய்வான் நாட்டிற்கு தொழிலாளர்களுக்கான வெற்றிடம் எம்மிடம் உள்ளது கடவுச்சீட்டுடன் தொடர்பு கொள்ளவும்.

# T. V. TRAVELS & TOURIST

Railway Station (Front)

**Brown Road, Kokuvil.**

(C - 1017)


பொறியியலாளருக்கு

## பாராட்டு விழா

சுழிபுரம், ஜன 2

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள சைவ ஆலயங்களில் வழக்கம்பரை அம்பாள் ஆலயம் ஒரு புதுப் பொலிவும் அமைப்பும் கொண்டதாக இன்று விளங்குகின்றது.

இதனை யாவரும் வியக்கத்தக்க வகையில் ஆக்கிய பெருமை பொறியிலாளர் திரு. நா. நடேசனையே சாரும்.

வழக்கம்பரை அம்பாள் ஆலய பரிபாலன சபையினர் பொறியிலாளர் நா. நடேசனுக்கு அளித்த தேநீர் விருந்து வைபவத்தில் பேசிய பரிபாலன சபைச் செயலாளர் திரு. சி. ஞானச்சந்திர மூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் திரு க. கயிலைநாதன் தலைமையில் வைபவம் நடைபெற்றது. (ச-28)

## காரைநகரில்

காரைநகர், ஜன. 02

காரைநகர் கருங்காலியில் நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் (வயது 38) குடும்பத்தகராறு காரணமாகத் தமது உயிரை மாய்த்துக் கொண்டார். (இ-73)


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

## சித்தமருத்துவப் பிரிவிற்கு 1988-89 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவப் பிரிவிற்கு பி எஸ் எம். எஸ் பட்டமாணிப் படிப்பிற்கான மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

(அ) 1985, 1986, 1987 ஆகஸ்ட் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், ஆகியநான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஆ) 1989 ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராக இருத்தல்வேண்டும்

அனுமதி பற்றிய விபரங்களும். விண்ணப்ப பத்திரமும் உதவிப் பதிவாளர் (தேர்வு) தேர்வுக் கிளை. அவர்களிடமிருந்து ரூபா 10 ச் செலுத்தியோ, தபால் மூலம் எனின் 23 x 10 செ. மீ அளவுள்ள தபால் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு, விலாசமிட்டு ரூபா 10 க்கான காசுக் கட்டளையை அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27-01-1989

—பதில்பதிவாளர் (C/1041)



## G.C.E. O/L பரீட்சையில்

ஆங்கிலத்தில் விசேட சித்தி பெற [D]

ஓர் அரிய சந்தர்ப்பம்

பெப். 89-இல் நடைபெறவுள்ள பரீட்சைக்கான

# SPECIAL O/L ENGLISH

RAPID REVISION CLASS

1 1/2 மாத துரித பயிற்சி

ஆரம்பம்: 7-1-89 பி.ப. 1 மணி

முதன்மை வாய்ந்த அஸ்ரன் ஆங்கில ஆசிரிய குழுவின் இணைந்த சேவை.

- ✶ வாராந்தம் 8 மணித்தியால போதனை
- ✶ இலவச பாடக் குறிப்புகள்
- ✶ மாதிரி வினா - விடைப்பயிற்சிகள்
- ✶ கட்டணம் ரூபா. 150/- [முழுப்பயிற்சிக்கும்]

விபரங்களுக்கு:

## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்

C/1049) (மக்கள் வங்கிக்அருகாமையில்)



உடுவில் மகளிர் கல்லூரி

## தொடர்கல்வி நிறுவனம்

பயிற்சி நெறிகள்:

1. Short-Hand, Type-Writing, [G: C: E: (O/L) & Pitman's London]
2. National Certificate in English (Sri Lanka & London)
3. I. A. B. (London)
4. மனைப்பொருளியல் (Cake - Icing, Hair Style, Dress-Making)
5. Pre-School Teacher Training (1 வருடம்)

✶ மாணவியருக்கு விடுதி வசதி உண்டு.

✶ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**Registration - 04. 01. 89 காலை**

**பயிற்சி ஆரம்பம்:- 06. 01. 89**

— இயக்குனர்

(C/1043)



## Foreign Employment:

# WANTED

**Labourers for Manual Loading and Unloading Heavy Cargo at Kuwait Port**

Applicants must be able - bodied, preferably with basic English Knowledge.

SALARY: KD 35 per 8hr day or KD 40 per 10 hr day

**Drivers & Forkilift Operators**

With gulf Area driving licence.

SALARY: KD 70 per 8 hr day.

**Foremen & Supervisors**

With experience in handling work related to Loading & Off Loading ships and controlling of labour.

SALARY: KD 110 per 8 hr day.

FREE ACCOMODATION AND AIR TICKET PROVIDED.

The above work being in the biggest Seaport in Kuwait, There is scope for overtime

We have no Sub-agents. Applications must be sent direct to us with copy of Passport and Certificates of Service. Applications close on 5-1-1989.

## Construction & Development Co. Ltd.,

37, S. D. S Jayasinghe Mawathe,

**NUGEGODA.**

Labour Licence No 96

Approval No. 96 / Advt / 48 / 88


4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

328 ருஹாந்த மிகேல்ரத்ன, எவ்/5, எல்விற்றிகல மாடி வீடு, கொழும்பு 8.
329 விவியன் விஜேரத்ன பீரிஸ், தந்தெனிய, எஹலிகொடை.
330 கே. என். குணரத்ன. 6/2, சமுத்ரா மாவத்தை, உயன்கல்ல பாணந்துறை.
331 எஸ் பி விஜேசிங்க, தேவாலய வீதி, வெலிகம்பற்றிய, ஜாஎல.
332 அனுக்ஷக பெரேரா, 155/ 73-77, கெமுனு மாவத்தை, பீலவத்தை, ஆண்டியம்பலம
333 தனுஷ்க பிரபோத் அபேசிரிவர்தன, 218, ஸ்ரான்லி திலகரத்தின மாவத்தை, ஜூபிலி, போஸ்ட் நுகேகொடை.
334 விதானலாக்கே மஹிந்த, 'ருக்செவன' எல்லபொல, பலாங்கொடை.
335 எஸ். ஏ. ஆரியதிலக, மாவத்தை வீதி, பண்டாவ, பொல்காவலை.
336 எச். எஸ். ஆர். பெரேரா, 522, ரெண்டவத்தை வீதி, பொரலஸ்கமுவ.
337 சயிஷா, பெர்னாண்டோ, 37/ 1, பௌத்த நிலைய வீதி, கல்பொள்ள, களனி.
338 நுவன் சாரங்க பெரேரா, 214, காலி வீதி, பாணதுறை.
339 திருமதி. பிரேமினா பெர்னாண்டோ, 118, டி/ 1, விமான நிலைய வீதி, இரத்மலானை.
340 திருமதி ஏ. செனவிரத்ன, 12/7ஏ, பிரிவேனா வீதி, கல்கிசை
341 டபிள்யூ. டி. டபிள்யூ சி. விக்ரம, 27, குணதிலக வீதி, வாதுவை.
342 செல்வி வை. எஸ். ரத்னபால, 512, நாவலை வீதி, ராஜகிரிய.
343 தினேஷ்சேனக, சம்புரப்பொல, 16, போப்பிட்டிய, வீதி, பெல்மதுல்ல.
344 திலினி எஸ். அவேனர்தன 36, பெரகம வீதி, அம்பாலாந்தோட்டை.
345 எஸ். சந்தன லங்கா சாந்தி. தயாரத்ன, 8/ 291, மண்டவில வீதி, கெஸ்பான, பிலியந்தலை.
346 பேபி தயான் சில்வா, 36பி, பத்தேகம வீதி, பிற்றகோட்டே
347 டபிள்யூ. ஏ, ரவீந்திரஜயந். 43, கடவத்தை வீதி, கனுபோவில தெஹிவளை
348 சுரேஷ் அபேசேகர, 7பி 12எல் , தேசிய வீடமைப்புத் திட்டம். ரத்கதுகம
349 திருமதி ஆர் குருப்பு, 29/1, நாரஹேன்பிட்ட வீதி, நாவலை.
350 திருமதி பி ஞானமுத்து, 120/6 காலி வீதி. தெஹிவளை.
351 இசுரு பல்லகே 'ரம்யசிறி' பொரகொடவத்தை மினுவாங்கொடை.
352 திலினி நிமின் நாணயக்கார, 72 புதிய வீதி கொழும்பு 2
353 புண்யாலி குணரத்ன 8 சென் ஜோசப் வீதி, நுகேகொடை.
354 குசும் குணரத்ன 'பிரியமுத்து' கல்லிந்த வத்தை பல்லேகம, மாவத்தகம.
355 எரின் பி டி. சில்வா, 264/6 பழைய கொட்டாவ ஒழுங்கை மிரிஹான நுகேகொடை.
356 லக்ஷ்மன் குருசிங்க, நாவின்ன வத்தை மடவலமுல்ல காலி.
357 எச் எம் லியனகே, 333 'மிஹிர' வராகொட களனி.
358 மொகமட் பர்வீஸ்; இல 22 தஸ்கர முருத்தகஹமுல்ல.
359 ஆதில்லா முஸாமில் 21 பெர்னாண்டோ கார்டின்ஸ் சேனநாயக்க பிளேஸ் வழியாக தெஹிவளை.
360 ஏ ஏ விஜேரத்ன மெகோட கனுகமுவ தொழுவ வீதி வழியாக கனுகம.
361 திருமதி கிறிஷாந்தி ஜஹரி 55/2 பொக்குன வீதி கொரவலப்பிட்டிய ஹெந்தலை வத்தலை.
362 [illegible] 'ஹெஷி' அல்வத்தை வந்துராகல குருநாகல்.
363 [illegible] 161 [illegible] எச் எஸ் ஒருவல அத்துருகிரிய.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சனசமூக நிலையம்

அண்மையில் கோப்பாய் வடக்கு சபாபதி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெற்றது.

நடப்பு வருட தலைவராக திரு. கோ. முத்துலிங்கமும்செயலாளராக கதிர்காமநாதனும் தெரிவு செய்யப்பட்டனர். (இ 72)

## கூட்டம்

காரைநகர் திருமணற்காடு அருள்மிகு அன்னை கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அன்னையின் தேவஸ்தானத்தில் காரைநகர் அன்னை அகண்ட நாம பஜனைக் குழுவினரின் அங்குரார்ப்பணகூட்டம் இன்று திங்கட்கிழமை நடைபெறுகின்றது.

## வெளிக்கள உத்தியோகத்தர்

தொழிலாளர்களின் குறைபாடுகளை தீர்க்கும் நடவடிக்கைகளைத் தாமதமின்றி எடுக்க பிரதேச உதவி அரச அதிபர் பிரிவு வாரியாக வெளிக்கள உத்தியோகத்தர்களை நியமிக்க தொழில் அமைச்சு முடிவு செய்திருக்கிறது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

**பொருள்:**
ஒழுக்கநெறி அறியாத பேதை ஒரு செயலை மேற்கொண்டால், (அந்தச் செயல் முடிவு பெறாமல்) பொய்படும்; அன்றியும் அவன் குற்றவாளியாகித் தளை பூணுவான்.


# உதயன்

[illegible]

இல: 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
02-01-1989 த. பெ. இல 23


## ஜே. ஆரின் கடைசிநேர அதிர்ச்சி வைத்தியம்!

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, தமது கதிரையில் இருந்து இறங்குவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னரும், அதிர்ச்சி வைத்தியம் செய்துவிட்டுப் போயிருக்கிறார்!

அதிர்ச்சி மருந்து ஏற்றப்பட்டது வேறு யாருக்கும் அல்ல; ஈழத் தமிழர்களுக்குத் தான்!

வடக்கு - கிழக்கு இணைப்பு நிரந்தரமாக நீடிக்கப்பட வேண்டுமா என்பதை நிர்ணயிப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பு இவ்வருடம் ஜூலை மாதம் 5 ஆம் திகதி நடத்தப்படும் என்று அவர் அறிவித்துச் சென்றுள்ளார்.

ஈழத் தமிழ் பேசும் மக்களின் தமிழீழம் என்ற அபிலாசைக்கு மாற்றீடாக முன்வைக்கப்பட்டது தான் அரைகுறைத் தீர்வான மாகாண சபைகள் திட்டம்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம்; வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தமக்கென ஒரு பாரம்பரிய பிரதேசத்தை உடையவர்கள். திம்பு மாநாட்டில் முன்வைக்கப்பட்ட இந்த இரண்டு முக்கிய அம்சங்களுக்குப் புறம்பாகவும், அவற்றை அடித்துச் செல்லும் விதத்திலும் வகை செய்யப்பட்டது தான் வடக்கு - கிழக்கு இணைப்புச் சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்பு.

வடக்கு - கிழக்கு மாகாண சபையை ஏற்றுக் கொள்ளுங்கள். அதனை இந்தியாவில் உள்ள மாநில அந்தஸ்துக்கு உயர்த்தித் தருகிறோம் என்று இந்தியா, ஈழத் தமிழர்களுக்கு ஆறுதல் கூறியது.

ஆனால் அந்த மாகாண சபையே உரிய அதிகாரங்களுடன், தக்க முறையில் இயங்கத் தொடங்குவதற்கு முன்னர் சர்வசன வாக்கெடுப்புக்குத் திகதி நிர்ணயித்து விட்டுப் போயிருக்கிறார் ஜே. ஆர்.

1988 டிசம்பர் 31க்கு நிர்ணயிக்கப்பட்ட சர்வசன வாக்கெடுப்பை 1989 ஜூலை 5க்கு ஒத்திவைத்திருக்கும் அறிவிப்பே இப்போதைய உத்தரவு என்று 'விழல்' தனமான விளக்கமும் கூறப்பட்டிருக்கிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தப்படி வடக்கு - கிழக்கு மாகாணசபை 1987 டிசம்பருக்கு முன்னர் இயங்கத் தொடங்கி இருக்க வேண்டும். அப்போது மட்டுமே சர்வசன வாக்கெடுப்பு 1988 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடக்க வேண்டும் என்ற ஒப்பந்த வாக்கியம் பொருந்தும்.

ஆகையால், இப்போதைய நிலையில், நியாயப்படி, 1989 டிசம்பருக்குப் பின்னர் தான் சர்வசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி அலுவலகம் விதண்டா வாதம் பேசியிருக்கிறது.

திரு. ஜெயவர்த்தனவும், அவரது கட்சியினரும் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிரானவர்கள். இதனை அவரே பல மேடைகளில் கண்களை உருட்டி, நாக்கை உணர்ந்திக் கூறியிருக்கிறார்!! ஆகவே அந்த விடயத்தில் குட்டையைக் குளப்பிவிடும் செயலே காலத்துக்கு முந்திய சர்வசனவாக்கெடுப்பு!

மாகாண சபை முறையின் கீழ், தம்மால் எந்த அதிகாரங்களை அனுபவிக்க முடிந்தது என்று கிழக்கு மக்கள் அனுபவ ரீதியாக அறிவதற்கு முன்னரே, இணைப்பா இல்லையா என்பதைத் தீர்மானிக்க நிர்ப்பந்திக்கப்படும் நிலை கேலிக்குரியது.

மொத்தத்தில் இது இலங்கை இந்திய ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்யும் முதற் சதி. தமிழ் மக்களுக்குத் தாயகம் உண்டு என்ற கோட்பாட்டைத் தள்ளுபடி செய்யும் சூழ்ச்சி.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, சுயாட்சி உரிமை உட்பட்ட உரிமைகளுக்குத் தொடர்ந்து ஆப்பு வைக்கும் அவசரமும் இதில் தெரிகிறது அல்லவா?

அப்போது நிலவிய சந்தர்ப்ப சூழ்நிலையை சமாளிப்பதற்காக, காலத்தைக் கடத்துவதற்காக, தமிழர்களுக்குச் சில சலுகைகளை மட்டும் வழங்கத் தான் இணங்கினேரே அன்றி, உரிமைகளை வழங்க அல்ல, என்று திரு. ஜெயவர்த்தன எடுத்துக் காட்டிவிட்டார். தமது சுயரூபத்தை வெளிப்படுத்தி விட்டார்.

இன்று பதவி ஏற்கும் புதிய ஜனாதிபதி திரு பிரேமதாசாவும், வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிரானவரே. ஆகையால் அவரும் இவ்விடயத்தில் குருவை விஞ்சாத சீடனாகவே இருப்பார் என்பதில் ஐயமில்லை.

மொத்தத்தில் தமிழர் பிரச்சினையின் மிகப் பிரதான விடயமான தாயகக் கோட்பாட்டைச் சிதைக்க முயற்சிகள் ஆரம்பமாகிவிட்டன. தாயகம் அங்கீகரிக்கப்படாத அல்லது ஏற்றுக்கொள்ளப்படாத தீர்வு தமிழர்களுக்கு உரிமைகளைத் தருமா என்பதை இதில் சம்பந்தப்பட்ட இந்தியா தீர்க்கமாக ஆலோசனை செய்வது நல்லது.

## வல்லரசுகள் பரிமாறிய புத்தாண்டுச் செய்திகள்

வாஷிங்டன் ஜன 1
உலகின் இரண்டு பெரும் வல்லரசுகள் இன்று புத்தாண்டு வாழ்த்துக்களைபரிமாறிக் கொண்டன.

அமெரிக்காவின் அதிபர் றொனல்ட் றேகனும் சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவும் ஒளிப்பதிவு செய்யப்பட்ட புத்தாண்டுவாழ்த்துச் செய்திகளில், அமெரிக்க சோவியத் மக்களை வாழ்த்திக்கொண்டனர்.

சித்தாந்தக் கருத்து வேறுபாடுகள் இரு நாடுகளிடையே இன்னமும் நிலவுகின்றன.

காலப்போக்கில்தான் இவ் வேறுபாடுகளுக்கும் தீர்வு காணமுடியும்.

ஆனால் வேறு துறைகளில் இரு வல்லரசுகளும் உலக சேமத்துக்காக ஒத்துழைக்க முடியும்; அப்படிச் செய்தும் வருகிறது.

உலகம் கடந்த ஆண்டு [1988] கூடிய பாதுகாப்பாக இருந்தது—இப்படி திரு: றேகன் புத்தாண்டுச் செய்தியில் கூறியிருந்தார்.

சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச் சேவ் தனது புத்தாண்டுச் செய்தியில்—

"ஆர்மேனியா அழிவின்போது உலக மக்கள் காட்டிய புரிந்துணர்வுக்கும் உதவிகளுக்கும் சோவியத்மக்கள் நன்றி கூறக்கடமைப்பட்டிருக்கிறார்கள்.

உலகில் அமைதி நிலவ நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்". என்று கூறியிருக்கிறார். (எ)

## இந்தியாவின் உள்நாட்டு பிரச்சினையில் பாகிஸ்தான் தலையிடாது-ராஜீவ்தகவல்

புதுடில்லி ஜன 1
இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிடுவது இல்லை எனப் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ உறுதி அளித்திருக்கிறார்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி புதுடில்லி விமான நிலையத்தில் வைத்து இத் தகவலைத் தெரிவித்தார்.

மூன்று நாள் பாகிஸ்தான் விஜயத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிய பிரதமர் காந்தியை செய்தியாளர்கள் சந்தித்துக் கேள்விகள் கேட்டனர்:

பாகிஸ்தான்—இந்திய உறவுகளில் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் இயங்கும் தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிக்கப்படமாட்டாது என்றுபாகிஸ்தான் அரசு உறுதிஅளித்துள்ளது.

பாகிஸ்தானின் கடந்த கால ஆட்சிகளை விட தற்சமயம் பதவியில் உள்ள மக்கள் கட்சி அரசு சிறந்ததாகத் தெரிகிறது;

காஷ்மீர் பிரச்சினையை பூட்டோ-இந்திராசிம்லா உடன்படிக்கையின் பிரகாரம் தீர்த்துக் கொள்வது என பாகிஸ்தான் சம்மதித்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள இந்திய யுத்தக் கைதிகளை விடுவிப்பது குறித்தும் பெனாஸிர் அரசு ஆராயச் சம்மதித்திருக்கிறது.

எல்லைத் தகராறு குறித்து சீனவுடன் இரகசிய ஒப்பந்தம் எதையும் இந்தியாசெய்து கொள்ளவில்லை.

இப்படிப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார். (எ)

### 3பலஸ்தீனியர் பலி!

டெல்அவிவ், ஜன 01
பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அரபாத் தலைமையிலான அல்-பதாஹ் அமைப்பு ஆரம்பமாகியதன் 25 ஆவது ஆண்டு நிறைவு இன்று கொண்டாடப் பட்டது.

இதன் காரணமாக இஸ்ரவேலிய இராணுவம் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களுக்கு மேலதிக துருப்புக்களை அனுப்பியது.

தொடர்ந்து பலஸ்தீனியருக்கும் இஸ்ரவேலியருக்கும் இடையே பலத்த மோதல் இடம்பெற்றது.

மோதலில் மூன்று பலஸ்தீனியர்கள் கெல்லப்பட்டனர் (எ)

## தமிழ் நாட்டில் மீண்டும் மதுவிலக்கு சட்ட மேலவை, மதிய உணவுத் திட்டம்!
### இந்திரா காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனம்

விருதுநகர், ஜன.1
தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று பிரதமர் ராஜீவ் காந்தி, இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் என்ற முறையில் நேற்று வெளியிட்டார்.

விருது நகரில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் பேசினார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

★ மது விலக்கு கொண்டு வரப்படும்.

★ மதிய உணவுத் திட்டம் தொடர்ந்து அமுல் நடத்தப்படும்.

★ சட்ட மேலவை மீண்டும் அமைக்கப்படும்.

★ மூதறிஞர் ராஜாஜி பெருந்தலைவர் காமராஜர் ஆகியவர் நடத்தியது போன்ற தூய்மையான ஆட்சியை இந்திரா காங்கிரஸ் வழங்கும்.

★ ஜனநாயகம், சமதர்மம், மதசார்பின்மை கட்சியின் முப்பெரும் கொள்கைகளே வழிகாட்டிகள்.

★ சட்டமன்ற உறுப்பினர் சொத்து விவரங்களை வெளியிட சட்டம் கொண்டு வரப்படும்.

★ ஊழல் ஒழிப்புக்கு தனி நீதிமன்றங்கள்.

★ கட்சி உறுப்பினர் மீது சுமத்தப்படும் ஊழல் குற்றச்சாட்டை விசாரணை செய்ய சான்றோர் குழு அமைக்கப்படும்.

★ 35 மாணவருக்கு ஒரு ஆசிரியர் நியமிக்கப்படும். மும்மொழிக் கல்வித் திட்டம் அமுல் நடத்தப்படும்.

இந்திரா காங்கிரஸின் 13 பக்க தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் மேலே தரப்பட்டுள்ளன. (எ)

### பெனாஸிருக்கு ராஜீவ் காந்தி அழைப்பு

இந்தியாவுக்கு விஜயம் செய்யும்படி பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோவுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி அழைப்பு விடுத்தார்.

## ஆப்கன் தீர்வு இழுபறியில்; ஐ. நா. பொதுச் செயலர் கவலை

ஐநா ஜன 1
ஆப்கனிஸ்தானில் சகல தரப்பினரும் பங்கேற்கக் கூடிய முறையில் அரசு ஒன்றை அமைக்க வேண்டும்.

இப்படி ஐநா பொதுச் செயலாளர் பெரேஸ்டி குயிலர் தெரிவித்தார்.

சகல தரப்பினரும் இதற்கு உதவ வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதனிடையில் ஆப்கனில் சோவியத் துருப்புக்களும் யுத்த நிறுத்தத்தை நான்கு தினங்கள் அனுஷ்டிக்கும் என்று மஸ்கோ அரசு அறிவித்தது.

ஏற்கனவே, ஆப்கன் அரசு யுத்த நிறுத்தம் ஒன்றை தன்னிச்சையாக அறிவித்தது தெரிந்ததே. (எ)

## மன்னர் ஹிரோஹிட்டோ மீது நாகஸாகி மேயர் குற்றச்சாட்டு

டோக்கியோ, ஜன-1
இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பான் தாக்கப்பட தற்போதைய மன்னர் ஹிரோ ஹிட்டோவே காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

83 வயதான மன்னர் மீது இக்குற்றச்சாட்டை சுமத்தியவர் நாகஸாகி நகரமேயர்.

உலகில் நீண்ட காலமாக ஆட்சி செலுத்தி வரும் ஹிரோஹிட்டோ மன்னர் இன்று மரணப் படுக்கையில் இருக்கிறார்.

இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பான்மீது அமெரிக்கா அணுக்குண்டுத் தாக்குதலை நடத்தியபோது அழிந்த நகரங்களில் ஒன்று நாகஸாகி. மற்றது ஹிரோஷிமா ஆகும்.

குற்றச்சாட்டை வாபஸ் வாங்க வேண்டும் என்று ஜப்பானின் ஆளும்கட்சி நாகஸாகி மேயருக்கு வேண்டுகோள் விடுத்தது.

ஆனால் நாகஸாகி மக்களின் ஒரு பிரிவினர் மேயருக்கு ஆதரவு தெரிவித்து உள்ளனர். (எ)

# நான்கு வருடங்கள் கடந்தும் இன்னும் அகதி நிலையில்

## தொண்டமனாறு மக்களுக்கு நிவாரணம் தானும் இல்லை

தொண்டமனாறு ஜன.2
தொண்டமனாறு ஸ்ரீலங்கா இராணுவ முகாமுக்கு அருகில உள்ள குடியிருப்புகளைச் சேர்ந்தோர் இன்னும் தமது பழைய இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலைமை இருந்து வருகிறது.

1985 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நிலைமை இருந்து வருவதாகவும் இதுவரை இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

1985 முதல் அகதியாக இருந்துவரும் ஒருவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

1985 ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தில் ஸ்ரீலங்கா இரணுவத்தின் முகாம் அமைக்கப்பட்டு பாலம் வரை விஸ்தரிக்கப்பட்டது.

இதனால் அப்பகுதியில் உள்ள நாம் அகதிகளாக வெளியேறினோம்.

அன்றிலிருந்து இன்று வரை அகதிகளாகவே இருந்து வருகிறோம். எமக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. ஆனால் இதே நிலையில் வேறு மாவட்டங்களில் உள்ள மக்களுக்குத் தொடர்ச்சியாக நிவாரண உதவி வழங்கப்பட்டு வருகின்றன —இப்படி அவர் கூறினார். (ச-126)

### சோடா விலை

யானை குளிர்பான சோடா ஒன்றின் விலை கோப்பாய் பகுதியில் 7.00 ரூபாவாக விற்கப்படுகின்றது.

(இ-72)

### ஜீ.சீ.ஈ...,

(2ஆம் பக்க தொடர்ச்சி)
பெற்றுள்ளனர்.

கலைத்துறையில் ஒரு மாணவி ஒரு 'ஏ' யும் இரண்டு 'பி' யும் ஒரு 'சி' யும் பெற்றுள்ளனர்.

பௌதீக விஞ்ஞானத் துறையில் ஒரு மாணவி இரண்டு 'ஏ' யும் இரண்டு 'பி' யும் பெற்றுள்ளார்:

உயிரியல் விஞ்ஞானத் துறையில் ஒரு மாணவி இரண்டு 'ஏ' யும் இரண்டு 'பி' யும் மற்றொரு மாணவி இரண்டு 'ஏ' யும் ஒரு 'பி' யும் ஒரு 'சி' யும் பெற்றுள்ளனர்.

வேம்படி மகளிர் கல்லூரியில் விஞ்ஞானப் பிரிவில் ஒருமாணவி மூன்று ஏ யும் ஒரு சி யும் மூன்று மாணவிகள் இரண்டு ஏ ஒரு பி யும் ஒரு சி பெற்றுள்ளனர்.

நால்வர் ஒரு ஏ யும் இரண்டு பி யும் ஒரு சி யும் பெற்றுள்ளனர்.

கணிதப் பிரிவில் இருவர் இரண்டு ஏ யும் இரண்டு பி யும் ஒருவர் ஒரு ஏ யும் இரண்டு பி யும் ஒரு சி யும் பெற்றுள்ளனர்.

வர்த்தக கலைத்துறையில் ஒருவர் இரண்டு ஏ யும் ஒரு பி யும் ஒரு சி யும் பெற்றுள்ளார்.

யாழ் [illegible] மத்திய [illegible] யத்தில் உயிரியல் விஞ்ஞானத்துறையில் ஒருவர் நான்கு பி யும் மற்றவர் வர்த்தகத் துறையில் ஒரு ஏ யும் இரண்டு பி ஒரு சி யும் பெற்றுள்ளனர்.

[illegible]

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் [illegible] துறையில் ஒருவர் [illegible] இரண்டு ஒரு [illegible] பெற்றுள்ளனர்

(இ- 10)

## உடுப்பிட்டியில் பிரமுகர்கள் சந்திப்பு; ஒத்துழைப்பு வழங்க அனைவரும் உறுதி

யாழ்ப்பாணம் ஜன.2
வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாற்று இயக்க தீவிர ஆதரவாளர்களும் அரசின் உயர்மட்ட உத்தியோகத்தர்களும், அமைதிப்படை அதிகாரிகளும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர்கள் க. யோகசங்கரி, ப. ஜீவரெத்தினம் ஆகியோரும் கலந்து கொண்ட கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

உடுப்பிட்டியில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் எல்லாத் தரப்பினரும் தமது கருத்துக்களை சுதந்திரமாகவும், வெளிப்படையாகவும் தெரிவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஈ. பி. ஆர். எல் எவ். வின் சார்பில் கருத்துத் தெரிவித்த தோழர் க. யோகசங்கரி, வடக்குக் கிழக்கு மாநில அரசின் [illegible] திட்டங்களை விளக்கமாக எடுத்துக்காட்டியதுடன் தமிழ்பேசும் மக்களுக்கு இன்று தேவைப்படுவது அமைதியும், ஜனநாயகமும் நிறைந்த ஒரு வாழ்வே என்பதையும் இதையே வடக்குக், கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களித்ததன் மூலம் மக்கள் முழு நாட்டுக்கும் தெளிவுபடுத்தியுள்ளனர் என்பதையும் வலியுறுத்தினார்.

ஜனநாயக வழியில் தமிழ் பேசும் மக்களுக்கு சேவையாற்ற முன்வரும் எந்த அமைப்புடனும் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அன்று தொடக்கம் இன்றுவரை ஐக்கியத்துக்காகவே குரல் கொடுத்து வந்துள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அங்கு சமுகமளித்திருந்த பிரமுகர்கள் வடக்கு — கிழக்கு மாகாண அரசுக்கு தமது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் தருவதாகவும் அரசு மேற்கொள்ளும் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளில் இணைந்து செயல்படுவதாகவும் இதன் மூலமே தமிழ் பேசும் மக்கள் இழந்த சொத்துக்களையும் உரிமைகளையும் மட்டுமல்லாது சகஜமான வாழ்வையும் பெற முடியுமெனவும் தெரிவித்தனர்.

(இ 5)

## சோஷலிசப் போராட்டத்தை துப்பாக்கிக் குண்டுகளால் நிறுத்திவிட முடியாது

கொழும்பு, ஜன 2
சோஷலிச போராட்டத்தைத் துப்பாக்கிக் குண்டுகளால் நிறுத்திவிடமுடியாது.

இலங்கை மக்கள் கட்சித் தலைவரான திரு. ஒஸி அபயகுணசேகரா முன்கண்டவாறு தெரிவித்தார்.

களுத்துறையில் இனந் தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த, மக்கள் கட்சிப் போஷகரான வண. பேமலோக தேரரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டு திரு. அபய குணசேகரா அஞ்சலி செலுத்தினார்.

நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவநாணயக்கார, முன்னாள் எம். பி. குணவர் [illegible] அஞ்சலி [illegible] னர். (இ-எ)

### வறுமை ஒழிப்புக்கு தனி அமைச்சு!

கொழும்பு, ஜன. 2
வறுமை ஒழிப்பு நிவாரண வேலைகளுக்கு எனத் தனியாக அமைச்சு ஒன்று நிறுவப்பட இருக்கிறது.

நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் திரு. பிரேமதாஸ எடுக்க இருக்கும் முதலாவது நடவடிக்கை இதுவாக இருக்கும் என்று அறியப்படுகிறது

(உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாகா சோப்பு
(ஆயுள்வேத வாசனை சோப்)
சகல விதமான சரும வியாதிகளுக்குச் சிறந்தது
சித்தாலேப
தடிமல், தலையிடி, காய்ச்சல், வாதம், நோ, உளைவு
முதலிய அநேக நோய்களுக்கு கைகண்டது.
கிடைக்கும் இடம்:
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்,
யாழ்ப்பாணம்.



# உதயன்

02 - 01 - 1989 திங்கட்கிழமை



சுப்பிரிவிக்கி பற்பொடி
ஆயுள்வேத மூலிகை பற்பொடியில்
கடுக்காய், சாதிக்காய், நெல்லி திற்பலி,
மிளகு, கிராம்பு, வேப்பம்பட்டை, உப்பு
முதலியன சேர்த்துத் தயாரிக்கப்பட்டது.
இது சகல பல் வியாதிகளையும் குணப்படுத்தி
வாய் சுத்தமாகவும் துர்நாற்றமின்றியும்
வைத்து இருக்கும் தயாரிப்பு:- சித்தாலேபா
கிடைக்கும் இடம்:
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.


## ஜெயலலிதா அணியின் தேர்தல் விஞ்ஞாபனம்!

சென்னை ஜன 2

அ. தி. மு. க. ஜெயலலிதா அணி நேற்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது.

பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்தார்.

அ. தி. மு. க. ஜெயலலிதா அணி பதவிக்கு வந்தால் லஞ்சம், ஊழலற்ற தூய்மையான ஆட்சியை மக்களுக்கு அளிக்கும்.

நாட்டின் நிர்மாணப் பணியில் மத்திய அரசுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும். மத்திய அரசுடன் மோதும் நிலையை மாநில அரசு ஏற்படுத்தாது.

★ நியாயவிலைக் கடைகள் மூலம் ஒரு கிலோ அரிசி 1 ரூபா 70 சதப்படி வழங்கப்படும்.

★ விவசாயக் கடன்கள் ரத்துச் செய்யப்படும்.

★ சிறு விவசாயிகளுக்கு இலவச மின் விநியோகம்.

★ இரண்டு மொழித் திட்டம் பின்பற்றப்படும்

-இப்படி விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டது.

## அமைதி, சமாதானத்துக்காக ஒன்றிணைந்து செயற்படுவோம்

### புத்தாண்டுச் செய்தியில் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன 2

கடந்த கால கசப்பான நிகழ்வுகளில் பொதுமக்களின் உயிர் பொருள் உடைமை இழப்புகளினால் இல்லாமல்போன அமைதி சமாதானம் ஐக்கியம் ஆகியவை புதிய ஆண்டான 1989 இல் இருந்து மீளப் பெறுவதற்கான கடமைகளை அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுப்போம்.

புத்தாண்டை முன்விட்டு ஈ பி ஆர் எல் எப் செயலாளர் நாயகம் திரு. கே. பத்மநாபா வடக்கு — கிழக்கு இணைந்த மாகாணசபை முதலமைச்சர் திரு அ வரதராஜப் பெருமாள் ஆகியோர் விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சாதி, சமய, பிரதேச பேதமற்ற புதிய ஓர் எதிர்காலச் சமூகத்தை கட்டி எழுப்ப — சமதர்ம சமூகத்தை உருவாக்கிட எம்மிடையே ஐக்கியம், சமாதானம், ஜனநாயகம் ஆகியவற்றைக் கட்டி வளர்ப்போம்.

புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாகாண சபையின் செயற்பாடுகளுடன் மக்கள் அனைவரும் பங்காளர்களாகி இணைந்து செயற்பட வேண்டும். (உ-இ)

## ஒற்றுமையுடன்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பிலும் அக்கறையுள்ள அனைத்து சக்திகளும் தம்மை இந் நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ் மக்களின் நியாயாதிக்க உரிமைகளை நிலைநாட்டிக்கொள்வதற்கும், புதிய வாழ்வை நிர்மாணித்துக்கொள்வதற்கும் இந்த நெருக்கடியான கட்டத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டிய தன் அவசியத்தை எல்லோரும் புரிந்துகொள்வார்கள் என்றே எதிர்பார்க்கிறோம்.

இன்றைய நிலைமையில் எமது மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, அவற்றை ஐக்கியப்பட்டுச் சாதிப்பது மட்டுமே எம்முன்னுள்ள முதற்கடமையாகும்.

அவரவர் சொந்த அரசியல் லாபங்களைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு வெவ்வேறு திசைகளில் பாய்ந்து செல்லச் சிந்திப்பதுகூட, மீண்டும் எமது மக்களுக்குத் துரோகம் செய்யும் நடவடிக்கையாகவே அமையும்.

இவ்வாறான நடவடிக்கைகள், நீண்டகாலப் போராட்டத்தின் பின் தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கும் மாகாண அரசாங்கத்திற்குச் சாதகமின்மையைத் தோற்றுவிப்பதாகவோ— சிங்களப் பேரினவாதத்தின் முன்னால் நாம் பிளவுபட்டு நிற்பதன் மூலம் தமிழ் மக்களுக்குப் பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதாகவோ அமைந்துவிடக் கூடாது என்பதில் நாம் எச்சரிக்கையோடியிருக்க வேண்டும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய எங்களைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களைப் போலவே மக்களின் தேவைகளுக்காகவும் ஐக்கியத்திற்காகவும் சகல விட்டுக்கொடுப்புகளுக்கும் தயாராகவே உள்ளோம். தமிழ் மக்கள் மத்தியிலுள்ள அனைத்து சக்திகளும் இதை உண்மையுடனும் நேர்மையுடனும் புரிந்துகொண்டு ஒத்துழைக்க முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம். (உ)

## ஜேயாருக்கு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிலிருந்து நேற்றுடன் ஓய்வு பெற்றார்.

நவரத்தினங்கள் பொறிக்கப்பட்ட — ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னமான— யானையின் சிலை ஒன்றை அமைச்சர்கள் திரு. ஜெயவர்த்தனவுக்குப் பரிசளித்தனர். (உ)

## பண்டாரகோட ஓய்வுபெறுகிறார்

கொழும்பு ஜன 2

புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சுச் செயலாளர் பதவியில் இருந்து திரு. ஜயதிஸ்ஸ பண்டாரகொட ஓய்வு பெறுகிறார்.

மகாவலி அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளராகவும் திருமலை அரச அதிபராகவும் அவர் முன்னர் பணியாற்றியிருந்தார். (உ-எ)

புத்தகங்கள், கொப்பி உட்பட

# மாணவரின் உபகரணங்களை அதிகவிலைக்கு விற்றால் பறிமுதல்

## உள்நாட்டு வர்த்தக அதிகாரி எச்சரிக்கிறார்

யாழ்ப்பாணம் ஜன 2

கொப்பிகள், புத்தகங்கள் உட்பட மாணவர் உபகரணங்களை விற்கும் வர்த்தகர்கள் அப்பொருள்கள் மீது விலைகள் குறிக்க வேண்டும். உரிய விலையிலும் கூடிய விலையில் அவற்றை விற்பனை செய்யும் வர்த்தகர்களிடமிருந்து அப்பொருள்கள் பறிமுதல் செய்யப்படும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு பொறுப்பான உள்நாட்டு வியாபாரப் பொறுப்பதிகாரி திரு. நா. அருளானந்தம் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களின் உபகரணங்களான அப்பியாசக் கொப்பிகள் 'மொனிற்றேர்ஸ்' அப்பியாசக் கொப்பிகள், 'ட்ரேயிங்' கொப்பிகள் கொம்பாஸ் பெட்டிகள் கலர்ப் பெட்டிகள், பெயின்ரிங் ஸ்ரிக் பெட்டிகள் போன்ற சகல பொருள்களுக்கும் விலைகள் குறிக்கப்பட வேண்டும். உற்பத்தியாளர்கள் விலை குறிக்காத விடத்து விற்பனை செய்யும் வியாபாரிகள் கட்டாயம் விலை குறித்தே விற்க வேண்டும்.

சில புத்தக வியாபாரிகளும், தனிப்பட்ட வியாபாரிகளும் விலைகுறிக்காத பாடசாலை உபகாரணங்களை கூடிய விலைகளில் விற்பதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆகவே இப்படியான வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களின் உபகாரணங்கள் பறிமுதல் செய்யப்படும் —என்று அவர் தெரிவித்தார்.

### பாடசாலைகளில்

சில பாடசாலைகளும் தமது பாடசாலைகளில் மாணவர்களுக்கான உபகரணங்களை விற்பனை செய்கிறார்கள். உதாரணமாக வெளிச்சந்தையில் ஒரு 'புல்ஸ்காப்' தாள் 30 சதம். ஆனால் பாடசாலை விற்பனை நிலையத்தில் அதன் விலை ஒரு ரூபா. இந்தளைக்கும் அந்த தாளின் மேல் பாடசாலையில் சிறிய சீல் ஒன்று மட்டும் குத்தப்பட்டிருக்கும்.

அது மட்டுமல்ல சீல் குத்தப்பட்ட தாளைத்தான் மாணவ மாணவிகள் வாங்க வேண்டும் எனவும் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள்.

இவ்விடயத்தில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் அதிபர்களும் அக்கறை எடுத்து தவறுகளை நிவிர்த்தி செய்ய வேண்டும். இல்லையேல் யாழ்ப்பாணம், சச்சேரியிலுள்ள உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் —என்று திரு. அருளானந்தம் மேலும் சுட்டிக் காட்டினார் (அ-10)

## 3 ஆயிரம்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புதுடில்லியில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

ஜனாதிபதி பிரேமதாசாவின் வழிநடத்தலின் கீழ் அதிகாரப் பரவலாக்கலை மாகாண சபைகளுக்குப் பயனுள்ள முறையில் பாரமளித்த இலங்கை அரசின் அண்மைக் கால நடவடிக்கையை இந்திய அரசு வரவேற்கிறது.

இது இலங்கைத் தமிழர்களுக்கு உண்மையான மாகாண சுயாட்சித் திட்டத்தை ஒரு படி நெருக்கமாகக் கொண்டு வந்திருக்கிறது.

இந்த நடைமுறையைக் குழப்புவதற்குத் தீவிரவாத சக்திகள் எடுத்த முயற்சிக்கு மத்தியில், அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

இஸ்லாமபாத்தில் இலங்கை ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன, பிரதமர் காந்தியைச் சந்தித்தார். அப்போது இலங்கையின் சுதந்திரம், ஐக்கியம் ஆகியவற்றைப் பாதுகாக்க இந்தியா அளித்த உதவிக்கு திரு. ஜெயவர்த்தன, பிரதமர் காந்திக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார் — என்று உள்ளது. (அ-எ)

## செயலா....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விஜேதாஸ நியமிக்கப்படுவார் என்று தெரிய வருகிறது.

தற்பொழுது இவர் பிரதமரின் செயலாளராக பதவி வகித்து வருகிறார்.

புதிய ஜனாதிபதியின் செயலாளராக திரு. பிராட்மன் வீரக்கோன் பதவியேற்கவுள்ளார். (உ-எ)

## தமிழியல் அரங்கு

யாழ்ப்பாணம், ஜன 2

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'தமிழ் இலக்கியங்களின் கற்பு' என்னும் பொருள்பற்றி யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் அ. சண்முகதாஸ் உரையாற்றுவார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத் தலைவர் திரு பொ. அருந்தவநாதன் இவ்வரங்கிற்குத் தலைமை வகிப்பார். (ச)

## தேர்தல்.,.

(1 ஆம்பக்க தொடர்ச்சி)

பணியாளர்களும், ஆசிரியர்களும் தமது செல்வீனக் கோரிக்கைகளுக்கான உறுதிச்சீட்டுக்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் கல்வித் திணைக்களத்தில் சமர்க்கும்படி கல்வித் திணைக்கள கணக்காளர் திரு. ஆர். சுகுணதீரன் கேட்டுள்ளார். (உ-10)

## ஈழவர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராக இருப்பதாக அறியப்படுகிறது. இவர்களில் முன்னாள் எம். பிக்களும் அடங்குவர்.

இதற்கிடையில் ஈரோஸ் அமைப்பின் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் மட்டக்களப்பு திருகோணமலைப் பகுதிகளுக்கு சென்று தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களுடனும், முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுவருவதாகக் கூறப்பட்டது.

ஈழவர் ஜனநாயக முன்னணியின் நிலைப்பாடும் முக்கிய முடிவுகளும் இன்று அல்லது நாளை வெளிவரலாம் எனவும் நம்பப்படுகிறது. அ-10

## கொள்ளையர் கூட்டம் வசமாகக் சிக்கியது!

### மருதமுனையில் சம்பவம்

கல்முனை, ஜன 2

கல்முனை மருதமுனைக் கிராமத்தில் இயக்கம் ஒன்றின் பெயரைக்கூறி வீடொன்றில் கொள்ளையிட முயன்ற ஆறு பேரை அப்பகுதி முஸ்லிம் மக்கள் சுற்றிவளைத்துப் பிடித்தனர். இச் சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தின் போது கொள்ளையர்களின் கத்திக்குத்துக்கு இலக்காகி 4 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் ஒருவர் பெண். காயமடைந்த நால்வரும் கல்முனை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

பிடிபட்ட ஆறு பேரையும் அப்பகுதி மக்கள் ஓர் இயக்க உறுப்பினர்களிடம் ஒப்படைத்திருப்பதாகவும்-

கொள்ளையர்களின் முன்னைய நடவடிக்கைகள் குறித்து அவர்கள் விசாரணை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-84)

## ஹாட்லி கல்லூரியில்

யாழ்ப்பாணம் ஜன 2

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் ஜீ சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகத் துறையில் நான்குபாடங்களிலும் 'ஏ' எடுத்துள்ளார்.

வேறு இரண்டு மாணவர்கள் 2 'ஏ' ஒரு 'பி' ஒரு 'சி' எடுத்துள்ளனர்.

கணிதத் துறையில் இரண்டு பேர் 3 'ஏ', 'பி' பெற்றுள்ளனர். வேறு இருவர் 2 'ஏ', 2 'பி' பெற்றுள்ளனர்.

உயிரியல் துறையில் ஒருவர் 3 'ஏ', பியும், மற்றும் ஒருவர் 'ஏ', 2 'பி', சியும் பெற்றுள்ளார்கள். (உ-101)

## தொழில்களை....,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீளமைப்பதற்கான நடவடிக்கைகளின் ஒருகட்டமாகவே இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் தொழில் முயற்சிகள் பாதிக்கப்பட்டு வேலைவாய்ப்பினை இழந்தவர்கள் தமது தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு இந்நன்கொடை உதவும்.

மீன்பிடித்தொழில், விவசாயம், சுயகுடும்ப உற்பத்தி நடவடிக்கை என்பவற்றில் மீண்டும் தமது தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவிருப்பவர்களுக்கே இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இந்தமாதம் தொடக்கம் வங்கிகள் மூலமாக இக்கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ -5)

## தபால் நிலையங்கள் கட்டப்படும்

கொழும்பு ஜன 2

1992 ஆம் ஆண்டுக்குள் மேலும் 115 தபால் நிலையங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட விருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

புதிய தபால் நிலையங்களின் கட்டட நிர்மாணப் பணிகள் முடிவுற்றதும் நாடு முழுவதும் உள்ள தபால் நிலையங்களின் எண்ணிக்கை 70 சத விதமாக அதிகரிக்கும். (உ-எ)

## குண்டு வெடிப்பில் மூவர் மரணம்

அமிர்தலஸரஸில் நேற்று குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் மூவர் உயிரிழந்தனர் 15 பேர் காயமடைந்தனர்.

சைக்கிள் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தபோதே மூவர் உயிரிழந்தனர். (உ-எ)

## பிரேமா----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது.

நிலைமையில் மேலும் முன்னேற்றம் காணப்படுமானால் இலங்கை அரசின் ஆலோசனையுடன் மேலும் துருப்புக்கள் விலக்கிகொள்ளப்படும் என்றும் புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ராஜீவ்——

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ய்வு செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒப்பந்தத்தின் விளைவு குறித்தும், இலங்கையில் இந்திய அமைதிப்படை நிலைகொண்டிருப்பது குறித்தும் இரு தலைவர்களும் ஆராய்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மரண அறிவித்தல்கள்

### இராசதுரை முருகையா

(தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழக உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

இராசதுரை முருகையா அகால மரணமானார். இவர் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், வேந்தன் இராவணன், தேவி உதயதாரணி, அன்பரசன் சங்கிலியன், தமிழரசன், குளக்கோட்டன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமலை வாழ் இராசதுரை நாகம்மா தம்பதியின் மூத்த மகனும் திருமதி சோமசுந்தரம் சுந்தரத்தின் அன்பு மருமகனும், ஜீவரெட்ணம் (கடற்படை திருமலை), செல்வநாயகம், நீலலோஜினி தர்மகுலசிங்கம், மனோகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்மகுலசிங்கம் (இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்) கனகராஜா (பிரான்ஸ்), வரதராஜா (கனடா), புவனேந்திரராஜா (கனடா), தம்பிராஜா (கனடா), பரமேஸ்வரி, புனிதம்மா, சீதாதேவி, பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் - தம்பிப்பிள்ளை நடராசா, துரைச்சாமி (ப. நோ. கூ. ச மானிப்பாய்) சிவலிங்கம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகலனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (திங்கள்) 2-1-89 பி.ப 2 00 மணியளவில் இல.4 ஸ்ரான்லிக் கல்லூரி வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் அரியாலை சிந்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. சிவலிங்கம்

இல 4, ஸ்ரான்லி கல்லூரி வீதி,
அரியாலை. (8561)

### திருமதி வல்லிபுரம் செல்லம்மா

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரம் செல்லம்மா அவர்கள் காலமானார். இவர் காலஞ்சென்ற முருகேசு வல்லிபுரம் (ஓய்வு பெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்) அவர்களின் அன்பு மனைவியும், யோகபாலச்சந்திரன் (இலங்கை குடும்பத்திட்டச் சங்கம்), சிவஞானம் (பொலிஸ் உத்தியோகத்தர் மட்டக்களப்பு), ஜெகதாம்பிகை, ஆனந்தசிவம் (பிரான்ஸ்), கமலாம்பிகை, லலிதாம்பிகை (பிரான்ஸ்), ஞானம்பிகை (பிரான்ஸ்), கங்காதரன், ஸ்ரீதரன் (யாழ். பல்கலைக்கழகம்), ராதாமனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கே. பாலச்சந்திரன் (கொழும்பு கலைச் சங்கம்), அருளம்மா, சிவராமலிங்கம் (வைத்தியர்), இந்திராதேவி (ஆசிரியை வரணி மகாவித்தியாலயம்) தவமணிதேவி (யாழ் பல்கலைக்கழகம்) நல்லநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஜெகன், மோகன் (கனடா), மோகனசுதன் சிவப்பிரியன் லாவண்யா மோகனமுரளி அம்பிகா ஜனகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார். இறுதிக் கிரியைகள்பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: K. S. ரூபன்

மோகனபவன்
திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம். (8565)

### தம்பிப்பிள்ளை பாலசிங்கம்

கரம்பொனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முன்னாள் பிரபல வர்த்தகரும் ஊர்காவற்றுறை ஜெரூட் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய தம்பிப்பிள்ளை பாலசிங்கம் 31-12-88 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை முத்தம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற திருமதி பேளி அக்னஸ் இன் அன்புக் கணவரும் ஜெரூட் (ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி; உரிமையாளர் செல்லம்ஸ். பேளி ஜுவல்லரீஸ், யாழ்ப்பாணம்) என்பவரின் அன்புத் தந்தையும் மதிற்றே ஜெரூட்டின் அன்பு மாமனாரும் நாரந்தனை பே. வ. சூசைப்பிள்ளை, பெலிஸ்ரஸ், B L. பங்கராசா (உரிமையாளர் ராஜா ஸ்ரோர்ஸ் ஊர்காவற்றுறை) இமல்டா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற S. E. ஐயாத்துரையினதும் திருமதி றோசம்மாவினதும் சம்பந்தியும் ஜோசப் யூட் அன்ரனிற்றா மரி டெக்ஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் கரம்பொன் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக அன்னாரின் இல்லத்திலிருந்து 4-1-89 (புதன்கிழமை) காலை 9.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

கரம்பொன்
ஊர்காவற்றுறை (8564)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில்(02 - 01- 1989) அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt ) Ltd 292/2 Zavalar Road, Jaffna on Monday 02nd January 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org